அம்பலாந்தோட்டை பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்குரிய சபைக்கு கிடைக்க வேண்டிய ஹம்பாந்தோட்டை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 3.43 மில்லியனிற்கான முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்திருக்கவில்லை.	மாகாண வருமான அலுவலகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை பெற வேண்டியதென உட்படுத்தும் படி பிரதான செயலாளர் அறிவித்திருந்தது என.	காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ)	2024 ஆண்டிற்குரிய நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட சபைக்கு சொந்தமான 80 காணிகள் மற்றும் 03 கட்டிடங்களின் பெறுமதியினை, பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிச்சயிக்கப்பட்ட கால சட்டகமொன்றினுள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 80,987 இற்கான வருவாய் செலவுகள், மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்யப்படும் என.	வருவாய் தன்மையான செலவுகள் மூலதனப்படுத்தக் கூடாது.
(ஈ)	மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய 06 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 77,933 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்யப்படும் என.	செலவுகளுக்காக திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 08 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 377,977 தொகைக்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.	வித்தியாசங்களுக்குரிய காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்கு சரி செய்யப்பட வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
அட்டவணைகள், கணிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகையில் ரூபா 24.64 மில்லியன் தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	விரிவான அட்டவணைகள் காணப்படவில்லை என மற்றும் சில மீதிகள் இனங்காண முடியாமல் நீண்டகாலமாக காணப்படும் மீதிகளாக இருப்பதுடன் சில மீதிகள் சபையின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் 2011 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது வீதவரி அறவிடப்பட்டமையால் பெறுமதி மதிப்பீடு காலரீதியாக செயற்படுத்தப்படாத காலம் 08 வருடங்களாக காணப்பட்டது.	2023 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் 2025 ஆண்டு முதல் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வீதவரி ஆதனங்கள் குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் காலரீதியாக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட திறைசேரிச் செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான செயற்படு நிலையில் காணப்படாத 04 வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திருத்த வேலை மேற்கொள்ளல் ஆக்கபூர்வமானதா அவ்வாறன்றேல் அப்புறப்படுத்தப்பட வேண்டியவையென பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	செயற்படு நிலையில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 24.58 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4.44 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபைச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	5,550,000	6,476,070	5,975,903	3,428,403	5,310,000	5,940,312	6,627,668	3,170,102
வாடகை	15,310,600	16,967,348	17,023,279	1,753,173	15,432,000	12,575,167	16,164,732	5,159,267
அனுமதிப் பத்திரக் கட்டணம்	3,342,000	4,570,199	3,689,283	1,472,540	2,647,000	3,685,863	3,978,259	467,850
ஏனைய வருமானங்கள்	13,217,000	14,248,409	13,321,467	1,539,792	12,896,000	14,561,420	14,503,543	607,790
மொத்தம்	**37,419,600**	**42,262,026**	**40,009,932**	**8,193,908**	**36,285,000**	**36,762,762**	**41,274,202**	**9,405,009**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 9.41 மில்லியன் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 42.26 மில்லியன் காணப்பட்டது. அதன் படி ஆண்டின் போது சேகரிக்க வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 51.67 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், சேகரிக்கபட்ட வருமானம் ரூபா 40.01 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தல் முன்னேற்றம் 77 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	நிலுவை வருமானம் அறவீடு மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என.	நிலுவை வருமானம் சேகரிப்பதில் முன்னேற்றத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

2.2.3 வீதவரியும் வரியும்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகினற 3545 வீதவரி அலகுகள் தொடர்பாக நிலுவை வீதவரி வருமானம் ரூபா 3.03 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த நிலுவையை அறவீடு செய்திருக்கவில்லை.	ரூபா 365,731 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	சட்டத்தின் பிரிவு 158(1) இல் பிரகாரம் அந்த நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	84 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய வியாபார வரி ரூபா 201,000 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.	தொடர் நடவடிக்கைக்காக நிலுவைப் பதிவேடுகள் வருமானப் பரிசோதகருக்கு வழங்கப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.4 வாடகை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான 64 கடையறைகளிலிருந்து மற்றும் 14 கடைசதுரங்களில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 514,015 தொகை பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	ரூபா 347,685 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன் மீதியான நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின் பிரிவு 159(1) இல் பிரகாரம் அந்த நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் வாகனங்கள் வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2016 முதல் 2022 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 172,170 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை.	அறவிடப்பட வேண்டிய தரப்பினருக்கு கடிதங்கள் மூலம் அறிவுருத்தப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	2022 ஆண்டு முதல் நிலுவையாக காணப்படுகின்ற சபைக்கு சொந்தமான 25 கை வண்டிகள் தொடர்பாக ரூபா 131,500 தொகையொன்றினை அறவீடு செய்திருக்கவில்லை.	ரூபா 31,500 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகை காணப்படுகின்ற கை வண்டிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.5 அறிவித்தல் பலகைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 151 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 1.41 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், இந்த நிலுவையில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 106,000 தொகை காணப்படுவதனால் நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126(xxx) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2023 ஆண்டில் அறவிடப்படாத ரூபா 76,000 தொகை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2024 ஆண்டு ரூபா 429,230 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், நிலுவை வருமான அறிக்கைகள் வருமானப் பரிசோதகருக்கு வழங்கப்பட்டுள்ளது என.	சட்டத்தின் பிரிவு 126(xxx) இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.6 ஏனைய வருமானங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 9.80 மில்லியன் தொகை மற்றும் ரூபா 36.54 மில்லியன் தொகையாகும்.	நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 13.92 மில்லியன் தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 6.17 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் தருவித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1986 ஆம் ஆண்டின் போது நகர மண்டபமொன்று நிர்மாணிப்பதற்காக காணிகள் தனதாக்கல் மற்றும் அதற்குரிய செலவுகள் என அரசாங்க வங்கியொன்றில் ரூபா 150,500 இற்கான தொகையொன்று பிரதேச சபையின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த கணக்கின் மீதி ரூபா 2.48 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. பணம் வைப்புச் செய்து 20 வருடங்களுக்கு அண்மித்த காலம்	இந்தக் காணியை சபைக்கு உரித்தாக்குவதற்கு ரூபா 49.48 மில்லியன் தொகை தரப்பினருக்கு செலுத்த வேண்டுமென மற்றும் அவ்வாறான பாரிய தொகையொன்று சபைக்கு தாங்க முடியாமல் உள்ளது என.	குறிப்பிட்ட காணியை தனதாக்குவதற்கு அல்லது சேமிப்புக் கணக்கை பிரதேச சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கடந்திருந்த போதிலும் குறிப்பிட்ட காணியை தனதாக்குவதற்கு அல்லது சேமிப்புக் கணக்கை பிரதேச சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஆ)	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணிப்பீட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்படாத 02 வள்ள பூட்டுக்கள் மற்றும் பந்தல் தொடர்பாக நடவடிக்கை ஏதும் 2024 திசெம்பர் 31 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	02 வள்ளப் பூட்டுக்கள் தொடர்பான ஆவணங்கள் முடியாமல் உள்ளது என.	கணிப்பீட்டில் இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
(இ)	மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் படி சபையினால் 2022 ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 02 கட்டிட வரைபுகள் குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபுக்கு புறம்பாக மிகையாக நிர்மாணிக்கப்பட்டிருந்த தொகைக்காக ரூபா 290,472 இற்கான கட்டணம் அறவீடு செய்தவற்கு 2024 திசெம்பர் 31 திகதியளவிலும் முடியாமல் இருந்தது.	நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என.	சபைக்கு அறவிடப்பட வேண்டிய குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்து திருததிய வரைபு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2015 ஒக்தோபர் 06 திகதி முதல் MN-1 தொகுதியைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர் பதவியொன்றிற்காக உட்படுத்தப்பட்டிருந்த ஒருவர் தொடர்பாக தகுதிகான் காலத்தினுள் கல்வித் தகைமைகள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல், தகுதிகான் காலம் பூர்த்தியடைந்த பின்னர் நிரந்தரப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. 4 வருடங்களுக்கு மிகையான காலம் இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் முன்பள்ளி ஆசிரியர் சேவையின் நியமனத்திற்காக அதற்குரிய தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத போலியான கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பித்திருந்த ஒருவரை உட்படுத்தி தகுதிகான் காலத்தை நீடிக்காமல் சபை நிதியத்திலிருந்து ரூபா 3.37 மில்லியன் தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.	பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் படி 2016 ஆண்டு முதல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் 2022 ஜூன் 23 திகதி பெறுபேறுகளில் பொருந்தாமைகள் காணப்படுகின்றது என கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி 2023 மார்ச் 10 அறிவுரை வேண்டி ஹம்பாந்தோட்டை உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, 2023 ஜூலை 06 திகதி முதல் சேவை இடைநிறுத்தப்பட்டது என.	போலியான சான்றிதழ்கள் சமர்ப்பித்த ஆட்களுக்கு மற்றும் அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளாமை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 14 பதவிகளுக்குரிய 21 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகைப் பதவிகளை அனுமதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபையின் பதவியணி தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	சபையில் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட 07 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 347,436 இற்கான கடன்மீதி அறவீடு செய்திருக்கவில்லை.	அவற்றில் ரூபா 27,000 அறவீடு செய்யப்பட்டதுடன், மீதியான கடன் தொகையை தவணைகளாக பிணையாளர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவைக் கடன் மீதிகள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரித்தல்/ ஒன்றிணைந்த மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் பாதைகள் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு இலக்குகளின் கீழ் 33 பாதைகள் அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 பாதைகள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.	மீதியான பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக வருமானம் போதியளவாக காணப்படவில்லை.	இலக்காகிய அபிவிருத்தி திட்டங்களை திட்டமிடுவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
வருமான உதவி செலவு விடயத்தின் பிரதிகூலமனா முரண்கள் ரூபா 11.36 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அதன் முரண்கள் 13 சதவீதமாகும். உபகரணச் செலவு மற்றும் காணிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடங்களின் செலவுகள் விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 9.7 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அதன் முரண்கள் 249 சதவீதத்தில் இருந்தது.	குறைபாடுகளை தவிர்ந்தகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என.	முரண்களை குறைத்துக் கொள்வதற்கும், திட்டமிடலை முறைப்படுத்துவதற்கும், வருமானம் சேகரித்தலை செயற்திறனாக்குவதும் மேற்கொள்ளப்பட வேண்டும் எடுக்வேண்டும்.